*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX,* பதிப்பு *22,* ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# நீதி இலக்கியங்கள் உணர்த்தும் - பொறையுடைமை

**செல்வன் த.கௌதமன்**
முதுகலைத் தமிழ் முதலாம் ஆண்டு
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
மெரினா வளாகம், சென்னை – 05.

## முன்னுரை

மனிதன் வாழ்வில் கடைபிடிக்கும் ஒழுக்கங்களில் பொறையுடைமை ஒரு சிறந்த அறமாகப் போற்றப்படுகிறது. ஒருவர் தீங்கு செய்த போதிலும் அவரைப் பதிலுக்குப் பழிவாங்கும் எண்ணம் இருத்தல் கூடாது என்பதை பொறையுமை உணர்த்துகின்றது. அவ்வாறு பழிவாங்கும் எண்ணம் கொண்டிருந்தால் மேலும் மேலும் பகைதான் உருவாகுமேயன்றி ஒருபோதும் அந்தப் பிரச்சனைக்குத் தீர்வுக் காண இயலாதபடி போகும். ஆனால் யாரேனும் ஒருவர் பொறையுடைமையைக் கைப்பற்றினால் அவர்களின் துன்பங்கள் ஒழிந்து, வாழ்வில் இன்பங்கள் தழைக்க வழிவகை செய்கின்றன என்பதை நீதி இலக்கியங்கள் உணர்த்துவதை இக்கட்டுரையின் வாயிலாக காண்போம்

## நிலமும் மனிதனும்

'பொறுமையில் சிறந்தவள் பூமாதேவி' என்பதைப் போல பொறுமைக்கு எடுத்துக்காட்டாக நிலத்தை கூறலாம். பூமியை எவ்வளவுதான் தோண்டினாலும் அதாவது காயப்படுத்தினாலும், அது தன் நிலையிலிருந்து மாறாமல் பொறுத்துக்கொள்கிறது. அதுபோல மனிதனும் தன் வாழ்வில் யார் நமக்கு எத்தகையத் தீங்கினைச் செய்தாலும் அதனைப் பொறுத்துக்கொள்ளும் மனப்பாங்கினை வளர்த்துக்கொள்ள வேண்டும், என்பதை உலகப் பொதுமறை என்று அழைக்கப்படும் திருக்குறளில், வள்ளுவர் பெருந்தகை பொறையுடைமை என்னும் அதிகாரத்தின் வழியாக எடுத்துரைக்கின்றார்.

**'அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**
**இகழ்வாரைப் பொறுத்தல் தலை' (குறள் : 151)**

இக்குறட்பாவில் தன்னை வெட்டித் தோண்டுபவரையும், கீழே விழாமல் தாங்கி காக்கும் நிலத்தைப் போல தம்மை அவமதிப்பவரை பொறுத்துக் கொள்ளுதல் முதன்மையான அறம் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும்,

**'ஒருத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்**
**பொன்றும் துணையும் புகழ்' (குறள் : 156)**

தமக்குத் தீமை இழைத்தவனைத் தண்டிப்பதால் உண்டாகும் இன்பம் ஒரு நாளைக்குத்தான். மாறாக தீமையைப் பொறுத்துக் கொள்வார் இறக்கும் வரைப் புகழுடன் போற்றப்படுவர் என்றுக் குறிப்பிடுவதை அறிய முடிகின்றது.

## அடக்கம் உடமையின் சிறப்பு

அடக்கம் என்பது ஒரு மனிதனிடத்தில் சிறு வயதிலிருந்து தோன்றியிருத்தல் சிறப்பினை அளிக்கும். எச்செயலைச் செய்தாலும் நிதானத்துடன் செயல்பட

வேண்டும் அவன் நிசானத்துடன் செயலாற்றுவதற்கு பொறுமை குணம் அவசியமாகிறது. பொறுமையின் சிறப்பினைப் பற்றி நாலடியார் பின்வரும் பாடலில் விளக்குகின்றது.

**‘இளையான் அடக்கம் அடக்கம் கிளைபொருள்**
**இல்லான் கொடையே கொடைப்பயன் எல்லாம்**
**ஒறுக்கும் மதுகை உரனுடையாளன்**
**பொறுக்கும் பொறையே பொறை’ (நாலடியார் - 7)**

இளைய வயதில் அடங்கி இருப்பது சிறப்பு. பெரும்பொருள் இல்லாதவன் கொடையளிப்பது சிறப்பு. அனைவரையும் வெல்ல வல்ல வலிமையும் அவ்வலிமையைக் காட்டவல்ல அறிவையும் உடைய ஆட்சியாளன் பிறர் குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளும் குணம் அவன் வாழ்விற்கு அறங்களாக அமையும் என்று குறிப்பிடுகிறது.

**முட்டாள்களுடன் வாதிடாதே**

முட்டாள்களுடன் விவாதம் செய்யக் கூடாது. முட்டாள்கள் என்றுமே அவசரத்துடன் வார்த்தைகளை வீசி மனதைக் காயப்படுத்தும் மனப்போக்குடன் வாழ்கின்றனர். பொறுமையைக் கடைபிப்பவனே தக்க நேரம் வரும்பொழுது வெற்றியை அடைவான் என்பதை நாலடியார் பின்வரும் பாடலில் குறிப்பிடுவதை காணமுடிகின்றது.

**கோதை அருவிக் குளிர்வரை நல்நாட**
**பேதையோடு யாதும் உரையற்க, பேதை**
**உரைகின், சிதைந்து உரைக்கும், ஒல்லும் வகையால்**
**வழுக்கிக் கழிதலே நன்று’ (நாலடியார் - 8)**

மாலைபோல் வாழுகின்ற அருவியினை உடைய குளிர்ந்த மலையைச் சார்ந்த நல்ல நாட்டனே! முட்டாளுடன் எதுவும் பேசாதே. நீ பேசின் அம்முட்டாள் சினந்து கொடும் சொல்லைப் பதிலுக்குச் சொல்லுவான். முடிந்தவரை அவனிடமிருந்து தப்பி விலகுதலே நல்லது என்று எடுத்துரைக்கின்றது. இப்பாடலின் வழியாக முட்டாளுடன் விலகி இருத்தல் நல்லது, முட்டாள் எத்தகையச் செயலைச் செய்தாலும் அதனைப் பொருட்படுத்தாமல் பொறுமைக் காப்பதே சிறந்த அறம் என்று உணர்த்தப்படுகிறது.

**பொறுமை சான்றோர்க்கு அழகு**

அனுபவத்தில் சிறந்த சான்றோர்கள் பொறுமையில் சிறந்தவர்களாவர். ஒருவனுக்கு அனுபவமே சிறந்த ஆசான் என்று கூறப்படுகிறது. ஒரு குழந்தையின் வளர்ப்பு பெற்றோர்களின் அரவனைப்பினைப் பொருத்து அமைகின்றது. பொறுமையைக் கடைப்பிடித்து செயலாற்றுபவர்களைச் சிறந்த சான்றோர்கள் என்று நாலடியார் பின்வரும் பாடலில் உரைக்கின்றது.

**‘பாடமே ஓதிப் பயன்தெரிதல் தேற்றாத**
**மூடர் மனிதக்க சொல்லுங்கால், கேடு அருஞ்சீர்ச்**
**சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே, மற்று அவரை**
**ஈன்றாட்கு இறப்பப் பரிந்து’ (நாலடியார் :32)**

மூலபாடம் ஒன்றை மட்டும் படித்து அப்பாடத்தின் பயனை ஆராயாது தெளிவில்லாமல் மூடர் சிலர் வெறுக்கத்தக்கவற்றை அவையில் சொல்ல நேரிடும்போது அழியாத புகழை உடைய சான்றோர் இத்தகு மகனை ஒரு தாயும் பெற்றாளே என இரக்கமுற்று வருந்தி அமைதிக் காப்பர். பொறுமையின் சிறப்பு, பெற்ற தாயும், தந்தையும் வளர்த்த விதத்தினை வெளிப்படுத்துகிறது.

**சிறியோர், பெரியோர்**

ஒருவரின் செயலினைக் கொண்டே பெரியோர், சிறியோர் என நிர்ணயிக்க முடிகின்றது. வயதினைக் கொண்டு சிறியோர், பெரியோர் என எண்ணுவதை விட

அவர்களின் செயலாற்றும் செயல்களைக் கண்டு நிர்ணயிக்கலாம். வயதில் சிறியவர்களாக இருப்பர். ஆனால் அவர்களின் செயல்கள் அனைத்தும் வியக்கும் படி அமையும். வயதில் பெரியோர்களாக இருப்பர் ஆனால் அவர்களின் கர்வத்தினைக் கொண்டு எந்நேரமும் முட்டாள்தனமாக செயல்படுவர். எனவே பொறுமையினைக் கடைபித்து நடக்கும் குணத்தை உடையவர்களையே பெரியோர்கள் என்றுக் கூறத்தகும்.

**‘இறப்பச் சிறியவர் இன்னா செயினும்**
**பிறப்பினால் மாண்டார் வெகுளார் திறத்துஉள்ளி**
**நல்ல விறகின் அடினும் நனி வெந்நீர்**
**இல்லம் சுடுகலா வாறு.’ (பழமொழி – 370)**

பொறுத்துக்கொள்ள முடியாத அளவு சிறியோர் துன்பத்தைத் தமக்குச் செய்தாலும், நல்ல குடிப்பிறப்பில் வந்த சான்றோர் சீற்றங் கொள்ள மாட்டார். நல்ல விறகைக் கொண்டு அடுப்பெரித்து வெந்நீரை மிகுதியாகக் கொதிக்கக் கொதிக்கச் சுட வைத்தாலும் அந்த வெந்நீர் வீட்டை எரித்துவிடாது என்று குறிப்பிடுவதை காண முடிகிறது.

**நகைகெட வாழ்**

ஒரு மனிதன் பிறர் நகைக்கும் வண்ணம் வாழ்தல் கூடாது. பொறுமையைக் கடைபிடிப்பவர்கள் பிறர் நகைக்க வாழ மாட்டார்கள். தனக்கு எத்தகையத் துன்பத்தைக் கொடுத்தாலும் அதனைப் பொறுத்துக்கொண்டு பிறர் வியக்கும் வண்ணம் வாழ்ந்து காட்டுபவர்களே பொறுமை என்னும் அறத்தைக் கடைப்பிடிப்பவர்களாவர் என்று சிறுபஞ்சமூலம் பின்வரும் பாடலில் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது.

**‘பிழைத்த பொறுத்தல் பெறுமை சிறுமை**
**இழைத்த தீமை எண்ணி இருத்தல், பிழைத்த**
**பகைகெட வாழ்வதும், பல்பொருளால் பல்லார்**
**நகைகெட வாழ்வதும் நன்று’ (சிறுபஞ்சமூலம் - 14)**

பிறர் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளல் பெருமை. பிறர் செய்த தீங்கினையே எண்ணியிருந்தால் சிறுமை. தான் செய்த பிழைகளிலிருந்து திருத்தி வாழ்தலும், செல்வரும், சான்றோரும் நம்மைப் பார்த்துக் கேலி செய்யாது வாழ்வதும் நன்மைத் தருவனவாகும்.

**மன்னித்தல் சான்றோர்க்கு அழகு**

பிறர் செய்யும் தீங்கினைப் பொறுத்துக்கொள்ளும் அழகு சான்றோர்களுக்கு உரியது என்று வெற்றிவேற்க்கைக் குறிப்பிடுகின்றது.

**‘சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்**
**பெரியோர் ஆயின், பொறுப்பது கடனே’ (வெற்றிவேற்கை – 31)**

சிறியவர்கள் செய்த சின்னப் பிழைகளைப் பெரியோர்கள் மன்னித்து விடுதலே கடமையாகும் என்பதை உணர்த்துகின்றது.

**புன்னியத்தைப் பாவத்தால் வெல்ல முடியாது**

பிறருக்கு நன்மையைச் செய்தவர்களுக்கு புன்னியம் கிட்டும். பிறருக்குத் தீமையைச் செய்தவர்களுக்கு பாவம் கிட்டும். நன்மையைச் செய்பவர்களுக்கு அறம் ஊன்றுகோலாய் அமையும். என்றுமே நன்மை செய்பவர்களுக்குத் தீங்கு நேராது. நன்மையைக் கடைபிடிக்கும் பெரியோர்கள் பொறுமையை கடைப்பிடிப்பவர்களாவர். புன்னியம் செய்தவர்களை யாராலும் ஒன்னும் செய்ய முடியாது என்பதை பின்வரும் பாடல் விளக்குகின்றது.

**‘சத்தியத்தை வெல்லாத சத்தியந்தா னீள்பொறையை**
**மெத்திய கோபமது வெல்லாது – பத்திமிகு**

**புண்ணியத்தைப் பாவமது வெல்லாது போரரக்கர்**
**கண்ணானைத்தான் வெல்லுவரோ காண்' (நீதி வெண்பா – 53)**

அரக்கர்கள் கண்ணனை வெல்ல முடியாது அதுபோல பொய், மெய்யை வெல்ல முடியாது, பெரும் சீற்றம் பொறுமையை வெல்ல முடியாது. எனவே பாவம் புண்ணியத்தை வெல்ல முடியாது என்பதை இப்பாடல் தெளிவுப்படுத்துகிறது.

**முடிவுரை**

பொறுமையைக் கடைபிடிப்பவனே சிறந்த அறத்தைப் பெறுவான் என்பதை இக்கட்டுரை தெளிவுப்படுத்துகிறது. மேலும், பொறுமையில் சிறந்த அறம் எதுவும் இல்லை என்பதே உண்மை. பொறுமையைக் கற்றவன் கல்வியில் சிறந்து விளங்குவான். பொறுத்தவர் என்றும் பூமியில் நிலைத்து ஆள்வார். பொங்கினவர் விரைவில் அழிந்துபோவர் என்பதை இலக்கியங்கள் பல்வேறு கதைகளைக் கொண்டு விளக்குகிறது. நீதி இலக்கியங்கள் அறத்தை பின்பற்ற வேண்டும் என்பதை விளக்க பல்வேறு கதைகளை நினைவூட்டும் விதத்தினைக் காணமுடிகின்றது. எனவே பொறுமை என்பது ஒரு மனிதனுக்கு அவசியமாகிறது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகின்றது.